
# களிமண்ணிலிருந்து உயிர் பெறும் மனிதர்கள்!

ஆர்ட் போஸ்ட்



'மாடர்ன் ஆர்ட்' என்றாலே 'அது நமக்குப் புரியாதுப்பா' என்று நம்மில் சிலர் ஒதுங்கிவிடுகிறோம். ஆனால், இந்த இருபத்தொன்பது வயது இளம் சிற்பி கோபகுமாரின் சிற்பங்களைப் பார்த்து அப்படி ஒதுங்கிவிட முடியாது!

நம் உடம்பில் ஓடும் ரத்தம்தான் இவரது சிற்பங்களிலும் ஓடுகிறது என்பதை நம்மால் உணர



முடிகிறது. சதுரமான சக்கரம் பூட்டி நகரும் நமது அன்றாட வாழ்க்கை, இவரது விரல்களின் தீண்டலில் சிற்பங்களாகின்றன. இவரது சிற்பங்களின் கருப்பொருள் மனிதனே! களைத்துப்போய் தான் இழுத்து வந்த கட்டைவண்டி மேலேயே படுத்துவிட்ட மனிதன்; படுத்தபடி புகைப்பிடித்துச் சுகம் காண்பவன்; எலும்பும் தோலுமாய்க் கடவுளை எண்ணிக் கைகூப்பி அமர்ந்துவிட்டவன் – இப்படி இவரது சுட்ட களிமண் சிற்பங்கள் உண்மையைப் பேசுகின்றன; வாழ்க்கையை உச்சரிக்கின்றன.

கோபகுமார் பெரும்பாடா கேரளத்தில் பிறந்தவர். கணிதப் பாடத்தில் பி.எஸ்ஸி. பட்டம். கேரளப் பல்கலைக்கழகத்தில் கலையில் இளங்கலைப் பட்டம். பிறகு, பரோடா பல்கலைக்கழகத்தில் சிற்பத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர்.

தன் சிற்பங்கள் அனைத்தும் 'புனிதமான குழப்பம்' குறித்துப் பேசுவதாகக் குறிப்பிடும் கோபகுமார், நல்ல கறுப்பு நிறம். சிற்பங்களின் முகபாவங்கள் அவரது முகத்தை நினைவூட்டுபவை.

தன் குடும்பத்திலேயே கடைக்குட்டியாகப் பிறந்த இவர், தனது இளமை நாட்களில் கீழ்த்தட்டு மனிதர்களுடனேயே அதிக நட்புடன் இருந்து வந்ததாகக் குறிப்பிடுகிறார். வண்டிச் சக்கரங்களில் இருக்கும் 'கீலை' எடுத்து, அதிலேயே பல உருவங்கள் செய்வதைத் தமது மிகச் சிறுவயதிலேயே கொண்டிருந்த இவரது இன்றைய சிற்பங்கள் மிகவும் தத்ரூபமானவை. இவரது கலை – உள்ளதை உள்ளபடி சொல்லும் கலையாகும்.

இவரது சிற்பங்களில், களிமண்ணில் சொரசொரப்பாக அவர் அமைக்கும் மேல்தோலின் பகுதிகளே, அந்தச் சிற்ப மனிதர்களின் குணவிசித்திரங்களைப் பேசத் தொடங்கிவிடுகின்றன.

**வண்டிச் சக்கர 'கீலில்' இருந்து உருவம் செய்யக் கற்றவர்!**

அவரைக் காட்டிலும் உயரமான அளவில் அமைந்த 'தொழும் மனிதன்' எனும் சுடுமண் சிற்பம் அற்புதமானது. சென்னை லலித்கலா அகாடமியில் ஜனவரி மாதம் நடைபெற்ற அவரது சிற்பக் கண்காட்சியில் அதைப் பார்த்த எவரும் உணர்ச்சிவசப்படாமல் இருக்க முடியாது. கழுத்து, தோள் ஆகிய பகுதிகளின் எலும்புகள் தூக்கி நிற்க, வளைந்த முதுகுடன், இடையில் சிறு ஆடையணிந்து, சப்பணமிட்டு அமர்ந்து தொழுதபடி இருக்கும் இந்தப் பெரிய சிற்பத்தை, அவர் பல துண்டுகளாக உருவாக்கி இணைத்திருக்கிறார்!

முகங்கள் உணர்ச்சிகளைக் காட்ட மிகச் சிறந்த கருவிகள் என்பதை நன்கு உணர்ந்து கொண்டவர் இவர். அதே நேரத்தில், ஒரு முகம் என்பது படைப்பதற்கு மிகவும் கடினமானதும்கூட! முகத்தில் தட்டையரான பகுதிகள் குறைவு. நமது முகம் குண்டும் குழியுமான ஒரு பகுதி. பள்ளத்தாக்கில் நிழல் கவிந்த பகுதியில் கண்கள். தோலின் சுருக்கம்/சுருக்கமின்மை வயதைப் பொறுத்தது. முகத்தில் இருக்கும் கோடுகள் அனைத்துமே வளைந்தவை. நேர்கோடுகள் முகத்தில் குறைவு. சிற்பி, இத்தனை சிக்கல்களையும் நன்கு உள்வாங்கிச் செரித்துக் கொண்டால்தான் தான் நினைக்கும் கருத்தை அந்த முகத்தின் மூலம் பேசமுடியும். இல்லையென்றால் முகத்தைச் சிரிக்க வைக்க முயல்கையில், அது அழும்; அழவைக்க முயல்கையில் சிரிக்கும். கோபகுமாரின் சிற்பங்களின் முகங்களில் உணர்ச்சிகளை கம்ப்யூட்டர் திரையில் படிப்பதுபோலப் படிக்க முடிகிறது.

கோபகுமாரின் நவீன கலை – பார்வையாளனை ஒரு நண்பனைப் போலக் கருதுகிறது. இந்தக் களிமண் சிற்பங்களைப் பார்க்கிறபோது, இசைக்குழுவில் தானும் இணைந்து பாடுவதுபோல, பார்வையாளன் கோபகுமாரின் கலைரசனையில் இணைந்துவிடுகிறான்.

இவரது கலை, உண்மையின் பிரதிபலிப்பு. மனிதனின் சாராம்சத்தைக் கலை மூலமாக வெளிக்கொண்டு வருகிறார் இவர்.

உட்பொருளும், வெளிவடிவமும் கலையின் இரண்டு பகுதிகள். ஒன்றில்லாமல் மற்றொன்று இல்லை. இவரது சிற்பங்களின் உள்வடிவம் அவற்றின் குணாம்சம். வெளிவடிவம் சிற்பத்தொழில் நுணுக்கம் சம்பந்தப்பட்டது. இந்த இரண்டிலும் தேர்ந்து விளங்கும் கோபகுமார் பெரும்பாடாவுக்கு மிக நல்ல எதிர்காலம் இருக்கிறது என்று சொல்லலாம். மனிதனின் ஆதிகால கலை சாதனமான களிமண்ணை, மிகத் திறமையுடன் கையாளும் சிற்பிகளில் கோபகுமார் பெரும்பாடாவுக்கு நிச்சயம் ஓர் இடம் உண்டு.

– இந்திரன்



★★

அகில இந்திய நடனப் போட்டிகள் மே 26-ல் பம்பாயில் நடக்கவுள்ளன. நடனத் திறமையுள்ள எவரும் இதில் கலந்துகொள்ளலாம். நவீன நடன வகைகளான பிரேக் பியூஷன், பாடி பாப்பிங், ரொபாடிக்ஸ், ஜாஸ் ஸ்டண்ட்ரப் போன்றவற்றிலும் சிறந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். நாட்டின் பல பகுதிகளிலும் மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொணர்வதோடு மட்டுமல்லாது இளைஞர் மத்தியில் விரவிக் கிடக்கும் போதைமருந்து பழக்கத்தின் தீமைகளை எடுத்துக் கூறவும் இந்தப் போட்டிகள் பயன்படும். தொடர்ந்து தீவிரமாகப் போதை மருந்து எதிர்ப்புப் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கும் டாக்டர் யூசுப் மெர்சன்ட் இந்தப் போட்டியின் சிறப்பு விருந்தினராக இருப்பார்.

தஞ்சாவூர் பாணி ஓவியங்களுக்குப் புதியதாக மவுசு வந்துள்ளது. கடவுளர் உருவங்களே அதிகம் இடம்பெறும் இந்தத் தஞ்சாவூர் ஓவியங்கள், தற்போது நகரங்களில் வாழும் மேல்தட்டு மக்கள் வீடுகளை அலங்கரிக்கத் தொடங்கி உள்ளன. இந்தப் புதிய ஃபேஷனுக்காக அவர்கள் அதிகம் விலை தரத் தயாராயிருப்பதால் தமிழகத்திலும் மகாராஷ்டிராவிலும் கலை வியாபாரிகள் இந்த ஓவியங்களை சல்லடைப்போட்டு தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

புதிய திரைப்படக் கல்லூரி ஒன்றைத் தொடங்க மத்திய அரசு தீர்மானித்துள்ளது. இருபத்து மூன்று கோடி ரூபாய் செலவில் கல்கத்தாவில் தொடங்க இருக்கும் இதற்காக மேற்குவங்க அரசு எட்டு ஹெக்டேர் நிலத்தை இலவசமாகத் தந்துள்ளது. பூனாவிலுள்ள திரைப்படக் கல்லூரியைப் போலவே திரைப்படத் தயாரிப்பின் அனைத்துப் பிரிவுகளிலும் இங்கு பயிற்சி அளிக்கப்படும். இது தொடங்கப்பட்டால் நாட்டின் மூன்றாவது திரைப்படக் கல்லூரியாக இது விளங்கும்.

ராஜா ரவிவர்மாவின் 114-வது பிறந்த நாளையொட்டி நடத்தப்பட்ட சித்ரா உத்ஸவ்-வில் முதன் முறையாக யசோதா கிருஷ்ணா மற்றும் சாகுந்தலா ஆகிய இரண்டு ஓவியங்களும் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. இதுவரை இந்த இரண்டு ஓவியங்களும் திருவாங்கூர் ராஜ குடும்பத்தினரின் அரண்மனையில் வைக்கப்பட்டிருந்தன.

நம் ஊரைப் போலவே அமெரிக்காவிலும் தியாகராஜர் விழா வழக்கமான நிகழ்ச்சியாகிவிட்டது. ராக் அண்ட் ரோலுக்குப் பழக்கமான அமெரிக்க மக்கள் தியாகராஜரையும் ரசிக்க ஆரம்பித்திருக்கின்றனர். பதினைந்து ஆண்டுகளாக நடந்துவரும் இந்த விழாவில், ஆண்டுக்கு ஆண்டு ரசிகர்களின் எண்ணிக்கை அதிகரித்தே வருகிறது. க்ளீவ்லாந்து மாநிலப் பல்கலைக்கழகமும் அங்குள்ள சிவா - விஷ்ணு ஆலயமும் சேர்ந்து நடத்திய இதில் – ஜாகிர் உசேன், மாண்டலின் ஸ்ரீனிவாஸ், டாக்டர் என்.ரமணி, திருசூர் ராமச்சந்திரன், குருவாயூர் துரை ஆகியோரும் கலந்துகொண்டனர்.

'சத்யஜித்ரேக்கு அஞ்சலி' எனும் தலைப்பில் பெரிய பேனர்களைத் தயாரிக்க புகழ்பெற்ற ஓவியர் எம்.எஃப். உசேன் ஒப்புக்கொண்டுள்ளார். 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையுடன் இணைந்து இறங்கும் இந்த முயற்சி, ரேக்கு ஓர் ஓவியனின் அஞ்சலியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

★★